## திவிநெகும வீடமைப்பு அபிவிருத்தி லொத்தர் நிதியம் - 2016

திவிநெகும வீடமைப்பு அபிவிருத்தி லொத்தர் நிதியத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதநிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 இன் 01 ஆம் இலக்க திவிநெகும அதிகாரச் சட்டத்தின் 45 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மேற்படி நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்களானவை திவிநெகும வீடமைப்பு அபிவிருத்தி லொத்தர் நிதியத்தின் 2016 திசெம்பர் 31 இல் இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம்

இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் 65 ஆம் பந்தியின் பிரகாரம் நடைமுறையல்லாச் சொத்துக்களின் பயனுள்ள ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாத காரணத்தால் கிரயம் ரூபா 2,369,568 ஆன கணனிப்பாகங்கள் முழுமையாகப் பெறுமானத் தேய்விடப்பட்டுள்ளதுடன் ஆனால் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. அதன் பிரகாரம் ஏற்பட்ட மதிப்பீட்டு வழு இலங்கைப் பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 03 இன் பிரகாரம் திருத்தப்பட்டுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

#### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்.

நிதியத்தின் கணக்கீட்டு கொள்கைக்கு இணங்க வருமானம் மற்றும் செலவுகள் அட்டுறு அடிப்படையில் கணக்கிடப்படுவதாக வெளிப்படுத்தப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டில் 3 தனிப்பட்ட நிறுவனங்களுக்குச் செலுத்த வேண்டிய மொத்தம் ரூபா 502,955 ஆன அட்டுறு செலவுகள் கணக்கில் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்

2006 திசெம்பர் 22 ஆந் திகதிய பீஎப்/423 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை மற்றும் 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை மூலம் வெளியிடப்பட்ட நிதிப்பிரமாணம் 876(3) பிரகாரம் நியதிச் சட்டமல்லாத நிதியமொன்று தொடர்ந்தும் பேணப்பட்டு வருவதற்கு நியாயமான காரணங்கள் இருப்பின் அவ்வாறான நிதியங்கள் பாராளுமன்றச் சட்டத்தின் மூலம் சட்டபூர்வமாக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனக் குறிப்பிடப்பட்ட போதிலும், நிதியத்தை சட்டரீதியாக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படாது முகாமைத்தவச் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட பிரமாண விதிகளின் பிரகாரம் மீளாய்வாண்டு வரையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதியத்தின் நிதி விளைவு ரூபா 447,187,633 ஆன மிகையாக இருந்ததுடன் , அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகையானது ரூபா 42,450,354 ஆனதுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் நிதி விளைவு ரூபா 404,737,279 ஆன முன்னேற்றத்தைக் காட்டுகின்றது. பயனாளிகளிடமிருந்து அறவிடப்பட்டிருந்த மாதாந்த பங்களிப்புப் பணம் ரூபா 15 இலிருந்து ரூபா 50 வரை

அதிகரிக்கப்பட்ட காரணத்தினால் பங்களிப்புப் பண வருமானம் ரூபா 677,960,370 ஆல் அதிகரித்தமை பிரதானமான காரணமாக இருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 மற்றும் 2015 ஆம் வருடங்களில் வெற்றி பெற்றவர்களின் எண்ணிக்கையில் தற்காலிகமாக இடை நீக்கம் செய்யப்பட்ட பயனாளிகளின் எண்ணிக்கை முறையே 14 மற்றும் 23 என்பதுடன் அந்த வருடங்களில் இரத்து செய்யப்பட்ட பயனாளிகளின் எண்ணிக்கை முறையே 32 மற்றும் 47 ஆகும். மேலும் 2016 ஆம் வருடத்திற்குள் வெற்றி பெற்ற 2,400 சீட்டிழுப்பு பரிசுகளில் வெற்றி பெற்ற 183 அதாவது ரூபா 36,600,000 பல்வேறு காரணங்களுக்காகச் சம்பந்தப்பட்ட மாவட்டச் செயலகங்களிலிருந்து திருப்பி அனுப்பி வைக்கப்பட்டன. அதன் பிரகாரம் பயனாளிகள் தொடர்பான தகவல்கள் நாளதுவரையாக்கப்படுதல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2016 சனவரி 12 ஆந் திகதிய நம்பிக்கைப் பொறுப்பு குழுவின் பத்திரம் DL/03/17 இன் பிரகாரம் 14 இலட்சம் பயனாளிகளிடமிருந்து பெறப்பட்ட பங்களிப்புத் தொகையில் நூற்றுக்கு 57.14 வீதம் வெகுமதிக் கொடுப்பனவுகள் செலுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டில் பெறப்பட்டிருந்த பங்களிப்புத் தொகை ரூபா 853,416,530 என்பதுடன் செலுத்தப்பட்ட மற்றும் செலுத்த வேண்டிய பங்களிப்புத் தொகை ரூபா 457,000,000 ஆக வெகுமதிக் கொடுப்பனவு நூற்றுக்கு 53.54 வீதமாக மதிப்பிடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் சராசரிப் பயனாளிகளின் எண்ணிக்கை 17,077,822 என்பதுடன் அப்பயனாளிகளில் வருடத்திற்குள் பரிசுக்குத் தகுதி பெற்ற பயனாளிகளின் எண்ணிக்கை 2400 அதாவது நூற்றுக்கு 0.014 வீதம் ஆகும். இக் காரணத்தால் அனைத்து பயனாளிகளுக்கும் வீடு என்ற நிதியத்தின் தொலை நோக்கு மற்றும் நோக்கங்களை அடைந்து கொள்வதற்குத் தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) நிதியத்தின் விதி முறைகளுக்கு இணங்க வெற்றி பெறும் பயனாளிகளின் பொருளாதார நிலைமையை உயர்த்துவதற்கு பொருத்தமான திட்டங்களில் கவனஞ் செலுத்துதல் நிதியத்தின் குறிக்கோளாக இருந்த போதிலும் இது தொடர்பாக எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

### 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 சனவரி 12 ஆந் திகதி நம்பிக்கைப் பொறுப்புச் சபைக் கூட்ட அறிக்கையின் பிரகாரம் வருடத்திற்குள் சீட்டிழுப்பிற்கான குறிப்பிட்ட திகதிகள் குறிப்பிடப்பட்டு இருப்பதுடன் பெறப்பட்ட பரிசுத் தொகைகள் காலதாமதமின்றி சமுர்த்தி மாவட்டச் செயலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்தது. ஆயினும், மீளாய்வாண்டில் சீட்டிழுப்பு எப்போதும் ஒரு மாதத்திற்கும் மேலாகத் தாமதமாகியிருந்ததுடன், பரிசுத் தொகை மாவட்டச் செயலகங்களுக்கு அனுப்பப்படுதலானது 27 நாட்கள் முதல் 60 நாட்கள் வரையில் தாமதமாகியிருந்தது.

(ஆ) 2011 ஏப்ரல் 29 ஆந் திகதிய பீஈடீ 58 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களத்தின் சுற்றறிக்கைப் பிரகாரம் பணிப்பாளர் சபை உறுப்பினருக்கு கொடுப்பனவாக ரூபா 5,000 ஆன படியொன்று அங்கீகரிக்கப்பட்டிருந்தது. எனினும், அச்சுற்றறிக்கையின் அடிப்படையில் நியதிச் சட்டமில்லாத நிதியத்தின் உறுப்பினருக்காக ரூபா 5,000 ஆன படியொன்று கொடுப்பதற்காக நம்பிக்கைப் பொறுப்புச் சபையினால் 2016 பெப்ரவரி 23 ஆந் திகதி நிறைவேற்றுப் பத்திரம் DL/03/19 மூலம் தீர்மானிக்கப்பட்டு மீளாய்வாண்டிற்காக ரூபா 310,000 செலுத்தப்பட்டிருந்தது.

(இ) 2016 திசெம்பர் 31 இல் 20 முதலீடுகளின் முதலீட்டுப் பெறுமதியான ரூபா 814,409,190 ஈனது 06 மாதங்கள் வீதம் குறுங்கால வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டதால் நீண்ட காலம் முதலீடு செய்யப்பட்டுப் பெறக் கூடியதாக இருந்த வட்டி வருமானம் இழக்கபபட்டிருந்தது.

(ஈ) ஒரு முறை வெற்றி பயனாளிகள் மீண்டும் சீட்டிழுப்பிற்காக குறிப்பிட்ட காலத்திற்கு இடை நிறுத்தி வைக்கும் செயன் முறையொன்றாக குறிப்பிட்ட காலப்பகுதிக்காக தரவுத்தள முறைமையில் பயனாளிகளின் பெயர்களை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(உ) காலி மாவட்டத்தின் 7 பிரதேச செயலகங்களின் சமுர்த்தி பெறுநர் பட்டியலிருந்து நீக்கப்பட்ட 10 சமுர்த்தி பெறுநர்கள் 2014 இலிருந்து 2016 ஆம் வருடங்களில் பரிசு பெற்றவர்களாக தெரிவு செய்யப்பட்டிருந்தனர். இதன் பிரகாரம் சமுர்த்திப் பெறுநர்களின் பெயர்ப்பட்டியல் நாளது வரையாக்கப்படாமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளதுடன் இதனால் வருடாந்தம் வழங்கப்படும் உதவித் தொகையின் அளவு குறைவடைந்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஊ) 2014 மற்றும் 2015 ஆம் வருடங்களுக்காக வீடமைப்பு சீட்டிழுப்பு 2016 சனவரி 18 ஆந் திகதி விடயப்பரப்பு அமைச்சரின் தலைமையில் இடம் பெற்றதுடன் அதற்காக ரூபா 787,242 செலவிடப்பட்டிருந்தது. மாவட்ட மட்டத்தில் விழாக்கள் நடாத்தப்பட்டு பரிசுகள் பெற்றவர்களுக்கு காசோலைகள் வழங்குவதற்காக ஒரு மாவட்டத்திற்கு ரூபா 20,000 வீதம் வழங்கப்படுவதற்கு நம்பிக்கைப் பொறுப்புச் சபை தீர்மானித்து 3 மாவட்டங்களுக்காக ரூபா 54,700 செலவிடப்பட்டிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2006 திசெம்பர் 22 ஆந் திகதிய பீஎவ்/423 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 2 மாதங்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமாயினும், மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் 2021 யூலை 14 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

2006 திசெம்பர் 22 ஆந் திகதிய பீஎவ்/423 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 4.1 பந்தியின் பிரகாரம் நிதியத்தின் அலுவல்கள் சம்பந்தமாக வரவு செலவுத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டிலான குறைபாடுகள் தொடர்பாக காலத்திற்குக் காலம் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்ததுடன் நிதியம் சட்டரீதியாக்கப்பட்டு உள்ளகக் கட்டுப்பாடு முறைமையொன்று நிறுவப்பட்டு நடவடிக்கைகள் முறையாகவும் செயற்திறனாகவும் பேணிச் செல்வதற்கான விசேட கவனம் கோரப்படல் வேண்டும்.